[23rd August 1961

THE HON. SRI V. RAMAIAH : (அ) & (இ) A statement[a] is placed on the table of the House.

Attack on a Co-operative Sub-Registrar

* 1365 *Q.*—**SRI S. M. ANNAMALAI :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்ற 22—1—61-ம் தேதி வடஆற்காடு மாவட்ட கூட்டுறவு பண்டகசாலையின் கூட்டத்தின்போது **(Co-operative Sub-Registrar)** ஒருவர் அடிக்கப்பட்டதாக புகார் வந்ததா ?

(இ) அப்படியாயின், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

THE HON. SRI R. VENKATARAMAN : (அ) No complaint was received either by the Government or the Co-operative Department. But the Co-operative Sub-Registrar made a complaint to the Police.

(இ) The Police dropped the case as there was no material evidence to prove the case.

Madras Buildings (Lease and Rent Control) Act, 1960

* 1366 *Q.*—SRI V. K. KRISHNAMOORTHY (on behalf of SRI S. LAZAR) : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether rules under the Madras (Lease and Rent Control) Act, 1960, have been framed and brought into force; and

(*b*) if not, the reasons for the delay?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) Yes.

(*b*) Does not arise.

SRI A. V. P. ASAITHAMBI : தலைவர் அவர்களே, ஒருவர் ஒரு வீட்டுக்கு மேல் சொந்தமாக வைத்திருந்தால் அந்த ஒரு வீடு தவிர, இதர வீடுகளை வாடகைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் கொண்டுவரக்கூடிய அளவுக்கு திட்டம் வகுத்தால் மக்களுக்கு அது மிகவும் வசதியாக இருக்குமே, அம்மாதிரி செய்ய உத்தேசம் அரசாங்கத்திற்கு உண்டா?

THE HON. SRI V. RAMAIAH : I require notice of a separate question, Sir.

Slum Clearance Scheme

* 1367 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the amount allotted for the State during the Third Plan for Slum Clearance Schemes; and

(*b*) the amount allotted for Tiruchirappalli, Coimbatore, Madurai and Salem, respectively?

---

a **Printed as Appendix VI on page 756 in fra**

23rd August 1961]

THE HON. SRI R. VENKATARAMAN : (a) & (b) A total provision of Rs. 300 lakhs has been made in the Third Plan for the execution of Slum Improvement/Clearance Projects in the State, out of which a sum of Rs. 150 lakhs has been set apart for slum projects in the mofussil areas. No specific allotments are made for Tiruchirappalli, Coimbatore, Madurai and Salem towns.

SRI M. KALYANASUNDARAM : இம்மாதிரி 150 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தும், நகர சபைகளிடத்திலே ஏதாவது யோசனை கேட்கப்பட்டதா? அப்படியானால், அவர்களிடமிருந்து வந்த பதில் என்ன?

THE HON. SRI R. VENKATARAMAN : மூன்றாவது திட்டத்திற்கு முன்னாலேயே அவர்களுக்கு இது சம்பந்தமாக எழுதியனுப்பி, அவர்களை ப்ராஜெக்ட்கள் போட்டு அனுப்பும்படிச் சொல்லியிருக்கிறோம். அவர்களிடத்திலிருந்தும் கூட சில ப்ராஜெக்ட்கள் வந்திருக்கின்றன.

SRI K. B. S. MANI : சேரி ஒழிப்புக்காக லட்சக்கணக்கான ரூபாய்களை ஒதுக்கி, புதிதாகக் கட்டிடம் கட்டும்போது, பன்றிக் கூடுகளைப் போல் கட்டுவதை நீக்கிவிட்டு கல்போட்டுக் கட்டிக் கொடுக்கிறோம். அதுவும் சேரியாகத்தான் கருதப்படுகிறது. சேரி யொழிப்புத் திட்டத்தின் கீழ் கட்டப்படும் கட்டிடங்களை பழையபடியே சேரியென்று கருதி, தனியாகக் கட்டுவதைவிட, மற்ற ஜாதியினர் மத்தியிலே வசிக்கக்கூடிய வண்ணம் கட்டி, அவர்களை குடியமர்த்த மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்திலே திட்டம் வகுக்கப்படுமா? அது பரிசீலனை செய்யப்பட்டதா?

THE HON. SRI R. VENKATARAMAN : சேரி ஒழிப்புத் திட்டத்தில் ஒரு நல்ல அம்சம்—ஹரிஜனங்களுக்கு என்று தனியாகக் கிடையாது. இதிலே எல்லாப் பகுதி மக்களும் வசிக்கின்றார்கள். சேரியொழிப்புத் திட்டத்தின் கீழ் சென்னையில் பல பகுதியிலிருந்தும் மக்களைக் கோடம்பாக்கம் போன்ற இடங்களில் எடுத்துச் சென்றிருக்கிறோம். எல்லா ஜாதியாரும் வசிக்கக்கூடிய முறையில் இருப்பது இத் திட்டத்தில் ஒரு நல்ல அம்சம் என்று நான் கருதுகிறேன்.

SRI P. G. MANICKAM : சேரியொழிப்புத் திட்டத்தின் கீழ் எந்த எந்த நகரங்களில் எத்தனை வீடுகள் கட்டவேண்டுமென்று சர்க்காருக்கு மனுக்கள் வந்திருக்கின்றன? இதுபற்றி சர்க்கார் பரிசீலனை செய்திருக்கிறதா? 1960-61ல் எந்த எந்த நகரங்களுக்கு இது அமுலாக்கப்படும்.

THE HON. SRI R. VENKATARAMAN : ஒரு ஸ்டேட்மென்ட் வைக்கவேண்டிய அளவுக்குக் கேள்வி இருந்தாலும் ஒன்றிரண்டு சொல்வதற்கு நான் தயாராயிருக்கிறேன். மதுரையில் சுடலை முத்துப் பிள்ளை ஸ்லம் இம்ப்ரூவ்மென்ட் ஸ்கீம், மார்க்கெட் ஸைட் ஸ்லம் இம்ப்ரூவ்மென்ட் ஸ்கீம், திருச்சியில் கல்லுமண்டை ஸ்லம் இம்ப்ரூவ்மென்ட் ப்ராஜெக்ட், திருநெல்வேலியில் இரண்டு மூன்று

திட்டங்கள், கோயமுத்தூரில் ஸ்லாட்டர் ஹவுஸ் ஏரியா ஸ்லம் இம்ப்ரூவ்மென்ட் ஸ்கீம், பாலன்தோட்டம் ஸ்லம் இம்ப்ரூவ்மென்ட் ஸ்கீம், லிங்கா கவுடர் தோட்டம் ஸ்லம் இம்ப்ரூவ்மென்ட் ஸ்கீம் என்று வந்திருக்கின்றன.

Textile Mills

* 1368 *Q.*—SRI S. PAKKIRISAMI PILLAI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether it is a fact that the South Indian Mill Owners Association have refused to abide by their agreement with the textile workers, represented by some of the Textile Workers Trade Union Associations in regard to the payment of the increased dearness allowance; and

(*b*) the action taken by the Government to make the Textile Mill Units pay their workers the dearness allowance on the increased rate as agreed to in 1960?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes, Sir.

(*b*) The Government convened a Conference of the representatives of employers and workmen of the textile mills in the State of Coimbatore on 28th June 1961 and discussed the issue. As a result of the discussions, the mill-owners have agreed to pay the increase in Dearness Allowance to workers as from the due date.

SRI S. PAKKIRISAMI PILLAI : இந்தப் பஞ்சப்படி தவிர இதர சிபாரிசுகளை—குறிப்பாக க்ளார்க்குகளுக்குச் சம்பள உயர்வு போன்றவைகளை அமுல் செய்வதற்கு சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்று சொல்ல முடியுமா?

THE HON. SRI R. VENKATARAMAN : க்ளார்க்குகள் சம்பந்தமாகப் பேச்சுவார்த்தைகள் நடத்த தொழிற்சங்கங்கள் தயாராய் இல்லை. இந்த ஒப்பந்தப்படி முதலில் தொழிற்சங்கமும் மில் அசோஸியேஷனும் பேச்சுவார்த்தை நடத்தவேண்டும். அவ்வாறு பேச்சுவார்த்தை நடத்தி முடிவுக்கு வராவிட்டால் அம்பயருக்கு விடவேண்டும் என்று சொல்கிறது. ஒரு தொழிற்சங்கம் மற்றொரு தொழிற்சங்கத்தோடு கலந்து பேச முடியாது என்றும், தனித்தனியாக தங்களுக்கு ரெப்ரசென்டேஷன் வேண்டும் என்றும் சொல்கிறது. நான் கோவையைப்பற்றிச் சொல்கிறேன். அதுதான் கேள்வி என்றும் நினைக்கிறேன். ஆகையால் அதில் ஒன்றும் மாறுதல் செய்யமுடியவில்லை.

Spinning Mills (Co-operative)

* 1369 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon the Minister for Industries be pleased to state the steps taken by the Government for starting a Co-operative Spinning Mill in each district?